AL12-1-1

# பரலோகத்தை குறித்த சுவாரஸ்யம் என்ன? பரலோகம் சுவாரஸ்யமான இடமா? –

நிகழ்ச்சி 1

இன்று ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியில் பார்க்கப்போவது, பரலோகத்தை குறித்த சுவாரஸ்யங்கள் என்ன? நீங்க ஒருவேளை டிஸ்னிலேன்டிற்கு போக நினைத்தாலோ, ஆல்பனில் ஸ்கையிங் செய்யவோ, ஐரோப்பா போகவோ, திட்டமிட்டால் முதலில் அது எப்படி இருக்கும் என்பது இணையதளத்தின் மூலமாக அறிந்துகொள்ள விரும்புவீர்கள். அப்படிபட்ட வழிகாட்டும் புத்தகங்கள் நம்மை அங்கு செல்ல பரவசப்படுத்திடும். பரலோகத்திற்கு செல்லும் வழிகாட்டி நம்முடைய வேதம், அதில் தேவன் நமக்கு வாக்களித்திருக்கும் புதிய வானங்களையும் புதிய பூமியையும் காண காத்திருக்கிறோம் என்றிருக்கிறது. ஆனால் பரலோகமானது, இந்த வசனம் சொல்கிற ‘‘புதிய வானங்கள் மற்றும் புதிய பூமி’’ ஒருநாள் உங்களுடைய வீடாக இருந்திடும், பரலோகத்தை குறித்து உங்களுக்கு என்ன தெரியும்? ஆங்கு என்ன செய்வீர்கள் என நினைக்கிறீர்கள், எப்படிபட்ட அனுபவம், நித்தியத்தை செலவிடப்போகும் இடம் எப்படிபட்டதாக இருக்கும்?

இன்றைக்கு எனது விருந்தினரான பரலோகம் என்ன புத்தகத்தின் ஆசரியர், டாக்டர். ரேன்டி அல்கார்ன். நம்முடைய எதிர்கால குடியிருப்பாகிய பரலோகத்தை பற்றி தேவன் கிறிஸ்தவர்களுக்கு வாக்களித்திருக்கிற அருமையான காரியங்களை விளக்கிடுவார். இன்றைய விசேஷ நிகழ்ச்சியில் நீங்களும் இணைந்திடுங்கள் ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சி.

-----------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: எங்க நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நூன் பரலோகம் என்று சுவாரஸ்யமான தலைப்பை பார்க்க இருக்கிறோம், இந்த உலகில் மிகவும் பிரசித்திபெற்ற ஒருவரை சந்திக்க இருக்கிறோம், டாக்டர். ரேன்டி அல்கார்ன், நம்முடன் இருக்கிறார். பல நாட்களாக அவர் வரவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன், அவர் சொல்ல இருக்கும் காரியங்கள் உங்களுக்கு விருப்பமானதாக இருந்திடும். நீங்கள் பரலோகத்திற்கு செல்வதைக் குறித்து வாஞ்சையோடு இருக்கிறீர்களா? ரேன்டி, நான் சந்தித்த அநேக கிறிஸ்தவர்கள், பரலோகத்தை குறித்த பரவசத்தோடிருப்பதாக தெரியவில்லை ஏனென்றால் அதை பற்றிய எந்த விஷயமும் அவர்களுக்கு தெரியல. அவர்கள் தாங்கள் இயேசுவை தங்கள் வாழ்வில் ஏற்றுக்கொண்டிருப்பதால் பரலோகம் சென்றிடுவோம் என்கின்றனர். இப்ப நீங்க கருத்தரங்குகளிலும் சபைக்கூட்டங்களிலும் பேசும் போது சபைகளில் காணப்பட்ட விஷயம் மற்றும் மாணவர்களுக்கு போதிக்கும் போது நடந்ததை சொல்லுங்க. நீங்க கவனித்த காரியம் என்ன?

டாக்டர். ரேன்டி அல்கார்ன்: வெல், எனக்கு அருமையான ஒரு நண்பர் இருந்தார், வேதத்தை நம்பிடும் போதகர், ஒரு நாள் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவர், ‘‘உனக்கு ஒரு, உண்மைய சொல்றேன், நான் சாகும்போது அப்படியே மாயமாயிடனும் என்றென்றென்றைக்குமா, இருக்கிற அந்த நித்தியம் வேண்டாம் என்றார்.’’ அதற்கு நான், ‘‘ஏன் அப்படி சொல்றன்னு கேட்டேன்’’ அதற்கு அவர், ‘‘ஏன்னா உண்மையில, மட்டமான யோசனையாயிருக்கு, அது சுத்த போர், சும்மா இருக்கனும். அதாவது, நாம் தேவனை ஆராதித்துக்கொண்டிருப்போன்னு தெரியும், நானும் தேவனை நேசிக்கிறேன், ஆனா வேறு சில காரியங்களையும் செய்கிறவனாக இருக்க நான் விரும்புகிறேன் என்று சொன்னார்.’’ அப்பதா யோசித்தேன், ஒரு போதகர், நல்ல பல்கலைகழகத்தில் படித்த வேதாகம கல்லாரி மாணவர், பரலோகத்தை குறித்த பரவசம் இல்லாமல் இருக்கிறார், இப்படியிருக்கிற இவர் யாருக்கும் பரலோகத்தின் சுவாரஸ்யத்தை பற்றி நிச்சயம் தெரியப்படுத்த மாட்டார். எல்லா ஜனங்களுக்குள்ளையும் ஒரு பொதுவான் எண்ணம் இருக்கிறதெ நான் நினைக்கிறேன், ஆமா, அதைக் குறித்த எண்ணம், அவங்க, கருத்து, என்னன்னா, பரலோகம் நகரத்தை விட சிறப்பாக இருக்கும்.

அதாவது, இது அதற்கு பதிலானதாக இருப்பதாக நினைக்கின்றனர், ஆனா அதைக் குறித்த எந்த ஆர்வமும் அவங்ககிட்ட கிடையாது.

அதன் பிறகு நாம் போக விரும்பும் இடங்களின் சுவாரஸ்யத்தை குறித்து, யோசித்தேன் ஒருவேளை டிஸ்னி வேல்டுக்கோ, கிராண்ட் கோனான் அல்லது வேறு இடத்துக்கு போகனுன்னா… நீங்க என்ன செய்வீங்க? அந்த இடத்தை பற்றிய தகவல்களை சேகரித்திடுவோம், அந்த இடத்தை பற்றி தெரிந்தவர்களிடம் பேசுவீர்கள், அதைப் பற்றி சில தகவல்களை கொடுப்பார்கள். அதனால தான், கிறிஸ்தவரான நாம், தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதை கண்டறிந்திட வேண்டும். பரலோகத்தை குறித்து தேவனுடைய வார்த்தை சொல்வதை கவனிக்கும்போது, இங்குதான் இயேசு, நாசரேத்திலிருந்த தச்சர், நமக்கு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்த சென்றார், நமக்காக அவர் 2000 வருடங்களாக ஆயத்தம்பண்ணியிருக்கிறார். அவர் கட்டிடகலைஞர், அவர் ஒரு தச்சர். எப்படி கட்டுவது என்பதும் எப்படி சரிசெய்வது என்பதும் அவருக்கு தெரியும். ஆவர் இந்த உலகத்தை உண்டாக்கினார், இந்த உலகம் சீர்கெட்டுபோனது, அதனால் அவர் இதை சரிசெய்திடுவார், அதனால் நாம் புதிய பூமியில் நித்தியமாக வாழ்ந்திடுவோம். இதை நீங்கள் நினைவில் வைத்துக்கொண்டால், பரலோகத்தை குறித்து மிகுந்த பரவசமடைந்திடுவீர்கள்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆமாம், நீங்கள புதிய வானம் புதிய பூமின்னு சொன்னீங்க. அதனுடைய அர்த்தத்தை எனக்கு சுறுக்கமா சொல்றீங்களா.

டாக்டர். ரனேட்டி அல்காரன்: அது, பல சமயங்களில் பரலோகத்தை குறித்து குறைவாக நினைக்கிறோம். நம்முடைய எண்ணம், ஓகே, ஒருவர் மரிக்கிறார், அவங்க இயேசுவ நேசித்தாங்க. அதனால் பரலோகம் போவாங்க. “இந்த தேகத்தை விட்டு பிரிவது தேவனோடு இருப்பதற்காகத்தான்.” அது சரிதான். மரித்தவுடன், பரலோகம் போறீங்க. ஆனா இப்ப இருக்கிற ஸ்தானத்திலேயே பரலோகம் இருக்கப்போவதில்லை. தேவன் பரலோகத்தை காணக்கூடாத மண்டலத்திலிருந்து புதிய பூமிக்கு இறங்கி வரச் செய்வார் என்று சொல்லியிருக்கிறார், புது சிருஷ்டிப்பு. அதை நாம் வெளிப்படுத்தல் 21-22, ஏசாயா 60, ஏசாயா 65ல், பார்க்கிறோம். இந்த புதிய பூமியில் தேவன் நம்மோடு வந்து வாசமாயிருக்க வருகிறார், அதில் அவருடைய சிங்காசனம் இறங்கி வந்து அவர் நம் மத்தியில் வாசமாயிருப்பார் என்று கூறுகிறது. நாம் உயிர்த்தெழுந்திடுவோம். நமக்கு புதிய சரீரம் கொர்டுக்கப்படும். இந்த புதிய பூமியும் நமது புதிய சரீரத்திற்கு ஏற்று இருக்கும். பழைய சரீரம் மரித்துவிடும். அவை, ஒரு காலகட்டத்தில், அழுகிவிடும். தேவன் உயிர்த்தெழுதல் நாளில் அவற்றை உயிர்பித்திடுவார். அதைப் போலவே, நாம் வாழ்கிற இந்த பூமியும், இதுவும், நிச்சயம் அழிக்கப்படும், ஆனால் அதுவும் உயிர்பிக்கப்படும், புதிய பூமி உண்டாகும் அதில் நாம் நித்தியமாக இருப்போம். அந்த புதிய பூமியில் இன்றைக்கு நமக்கு பழக்கப்பட்டிருக்கிற பல காரியங்கள் ஒன்றுபோல இருக்கும். நமக்கு சரீரம் இருக்கும் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து புசித்து குடித்து விளையாடி கதைகள் சொல்லி சந்தோஷமாக இருப்போம். ஆபிரகாமும் ஈசாக்கும் கிழக்கு மேற்கிலிருந்து வந்து அந்த மேஜையில் அவர்களோடு இணைந்திடுவார்கள். இதை எதிர்பார்த்து தான் நாம் காத்திருக்கவேண்டும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: எனக்கு, அன்பானவர்களே, பரலோகத்தில் நாம் எப்படி சந்தோஷமாக இருப்போம் என்பதை பற்றி ஆறு நிகழ்ச்சிகளில் விளக்கமளித்திடுவோம். எனவே, நீங்கள், தொடர்ந்து பாருங்கள், ஏனென்றால் நிச்சயம் சிறப்பாக இருந்திடும், பரலோகமானது என்றென்றைக்கு நித்திய நித்தியமாய் சிறந்த இடமாக இருந்திடும்.

சரி, முதலாவதாக, இப்போதும் பரலோகம் நிஜமான இடமாக இருக்கிறதென்பதை அவர்கள் மனதில் பதித்திட விரும்புகிறேன். உங்களுடைய புத்தகங்கள் ஒன்றில் நீங்கள் ஒரு கதை சொல்லியிருக்கிறீர்கள் அதாவது உங்க தாயார் மரித்தபோது நீங்க இரண்டரை வயதாயிருந்த உங்க மகளுக்கு விளக்க வேண்டியிருந்து, உண்மையில் அவளுக்கும், உங்க தாயாருக்கு அதிக நெருக்கமிருந்து, அன்பான பாட்டி. அந்த சூழ்நிலை எப்படி இருந்ததென்று சொல்லுங்கள், ஏன்னா பரலோகம் நிஜமான இடம் என்பதை விளக்கியிருப்பீர்கள்.

டாக்டர். ரனேட்டி அல்காரன்: எங்க மக கரினா, எங்க மூத்த மகள், அவதா அவ, பாட்டியோடு செல்லமாயிருந்தா. அவ தவறாம ஒவ்விவாரு திங்கட்கிழமைகளிலும், பாட்டியோட தா நேரத்தை செலவிடுவா, பாட்டிமா அவளுக்கு தேவ கதைகளை சொல்லிக்கொடுப்பாங்க அவள வெளியில கூட்டீட்டு போவாங்க அவளுக்கு பிடிச்ச செய்து கொடுப்பாங்க. என்னோடு தாயார் புற்றுநோயால மரித்துக்கொண்டிருந்தப்ப, என்னுடைய பெற்றோர் வீட்டுக்கு அவங்க பார்க்கும்படியாக கரினாவை கூட்டீட்டு போவோம், அவங்கள வீட்டிலேயே வைத்து சிகிச்சை அளித்து வந்தோம். அவ பாட்டி நிலைகுழைந்து இருப்பத பார்த்தா. அவனால அதை ஏற்றுக்கொள்ள முடியல, எங்களுக்கு வேதனையா இருந்தா, ஆனா அந்த சமயத்தில நாங்க எல்லாரும் ஒன்னா இருந்தோம். ஒரு நாள் இரவு நடுராத்திரியில் அம்மா இறந்துவிட்டதாக செய்தி வந்தது. நான் போய், செய்யவேண்டிய ஒழுங்குகளை செய்தேன். நான் திரும்ப வீட்டிற்கு வந்ததும் யோசித்தேன், எப்படி சொல்வது, கரினாவ போய்

எழுப்பினேன், அவ அம்மாவோட ரொம்ப செல்லமா இருந்தவ, அவ, தெரிஞ்சுக்கனும்னு நினைத்தேன். எனவே அந்த பாதி இராத்திரியில அவள போய் எழும்பினேன். அதை என்னால் மறக்கவே முடியாது, அந்த நாளில் நிற்பது போல உணருகிறேன்.

அவளோட கண்களை பார்த்தேன். அவ ரொம்ப சோர்வா தூக்கத்திலிருந்தாள். அவளைப் பார்த்து சொன்னேன், “கரினா, அல்கார்ன் பாட்டி எங்க இருக்காங்கன்னு உனக்கு தெரியுமா?” நான் அந்த கேள்விய கேட்டு முடிப்பதற்குள் , அவ சொன்னா, “தெரியு டாடி, பரலோகத்தில் இருக்காங்க.” அப்பறம் சில நிமிஷங்கள் கழித்து சொன்னா, “அவங்க இனி அந்த மருத்துவமனையில இல்ல. இப்ப இயேசுவின் மடியில இருக்காங்க.” எனக்கு உணர்த்தப்பட்ட காரியம் என்னன்னா, ஜான், என்னுடைய மக இப்படி சொன்னது கேட்டதும், நாங்க பரலோகத்தை குறித்து அவளுக்கு சொன்ன அனைத்தையும் அவ நம்பறா. பரலோகத்தை பற்றி வேதம் சொல்கிறவற்றை அவ கேட்டிருக்கிறாள், அதை அப்படியே விசுவாசிக்கிறாள். அதுதான் குழந்தையின் விசுவாசம். பிள்ளைங்களாக நாங்க எல்லாரும் வந்தோம். எல்லாம் இப்ப சரியாகிவிட்டது என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டோம். அவ பாட்டி அதிக வேதனையில் இருந்தாங்கன்றது புரிந்துகொண்ட, கரினா இப்ப சந்தோஷமாயிருக்கா. இது எங்களுக்கு பேரிழப்பாக இருந்தாலும், அம்மா தேவனோட இருப்பதால் சந்தோஷந்தா, ஆனா அவ சந்தோஷத்தின் உச்சத்தில் இருந்தால். இயேசுவோடு தனது பாட்டி இருக்காங்கன்ற சந்தோஷத்தோடு எங்க மக இப்ப சந்தோஷமா இருக்கா.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: இப்ப நம்முடைய ஆதாரத்தை நாம முன்பாக வைக்கலாம். இந்த வசனத்தை திரையில் காண்பிக்க விரும்புகிறேன். அப்போஸ்தலனாகிய பவுல் மரிக்கும் போது நடப்பதை கூறுகிறார். அவர் பிலிப்பியர் 1:21ல் கூறுகிறார், “கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.” ஓகே, இப்ப நாம பார்க்க இருப்பது, எப்படி ஆதாயமாக உள்ளது. மேலும் அவர் சொல்கிறார், “இவ்விரண்டிலும் நான் நெருக்கப்படுகிறேன். தேகத்தைவிட்டு பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு. அது அதிக நன்மையாயிருக்கும்.” பவுல் என்ன சொல்கிறாரென்றால், இந்த வாழ்க்கையில் கண்களை மூடினவுடனே, உண்மையில், கண்களை திறக்கும்போது அங்கு இருப்பீர்கள், ஐசுவரியவான் லாசருவைப்போல நடக்கும். இதுதான் உண்மை, இப்போது வேதனையில் வாடிக்கொண்டிருப்பவர்களுக்கு சொல்லுகிறேன், ஓகே, நம்பிக்கை, வேண்டும் பரலோகம் நிஜமான இடமென்று வேதம் சொல்கிறது அது உண்மை, நீங்க கண்ண மூடினவுடன், நீங்க எங்க போவீங்க? நீங்க தேவனோடு அங்கு இருப்பீர்கள்.

சரி, இப்ப இன்னொரு வசனத்தை பார்க்கலாம், ஏன்னா நேரம் ஓடிக்கிட்டே இருக்கு. வெளிப்படுத்த விஷேசத்தில், அப்போஸ்தலனாகிய யோவான் எழுதுகிறார், “நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்,” முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின, சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. நான் பரிசுத்த நகரமாகிய, புதிய எருசலேம் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவர கண்டேன், மணவாட்டியை போல ஆயத்தமாக, புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்டு இருந்தது. மேலும் நான் சிங்காசனத்திலிருந்து உண்டான பெருஞ்சத்தத்தைக் கேட்டேன், “இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம்இருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள் தேவன் தாமே அவர்களோடிருந்து அவர்கள் தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை துக்கமுமில்லை அலறுதலுமில்லை வருத்தமுமில்லை. முந்தினவைகள் ஒழிந்துபோயின என விளம்பினது.” இந்த வசனங்களுக்கு என்ன அர்த்தம், ரேன்டி?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: வெல், சிருஷ்டிப்புகள் சீர்படுத்தப்படும் என்பதை குறிக்கும் வாக்குத்தத்தம் தான் இது. சில சமயங்களில் வெளிப்படுத்தலின் கடைசி அதிகாரங்கள் மறந்துவிடுகிறோம் அதுதான் ஆதியாகம் முதல் சில அதிகாரங்களோடு தொடர்புடையவை. கதையின் ஆரம்பம் -- உண்மையான கதை – மனிதனும் மனுஷியும் அவருடைய மகிமைக்காக தேவன் நியமித்த வல்லமையான விதத்தில் ஆளும்படியாக துவங்குகிறது. நம்முடைய எண்ணம் இதுதான், அதை, சாத்தான் முற்றிலும் சீர்குழைத்துவிட்டான். அதன் பிறகு கிறிஸ்துவின் மீட்பின் கிரியைகளை பார்க்கிறோம், அதனுடைய நிறைவை தான் வெளிப்படுத்தல் கடைசி இரண்டு அதிகாரத்தில் உள்ளது, நீங்கள் இப்போது அதை வாசித்தீர்கள். இப்போது தேவன் அனைத்தையும் புதுபிக்கிறார், வேதத்தின் மறுபடியும் என்ற வார்த்தைகள், மீட்பக்கப்படுதல், ஒப்புரவாகுதல், மறுபடியும் புதுப்பிக்கப்படுகிறது. இதுவரை இல்லாத விதத்தில் சிறப்பாக செய்திடப் போகிறார். இழந்துபோனதை அவர் திரும்ப பெற்றுக்கொள்வார். பரதீசி இழக்கப்பட்டது. இந்த பரதீசி மீண்டும் பெறப்படும். இனி பாவம் இல்லை, வேதனைகள் இல்லை, இனி வலிகள் இல்லை. என்னவொரு கண்ணோட்டம். நாம் எங்கிருந்து வந்தோம் எங்கே போகப்போகிறோம் என்பதை நீங்கள் விளங்கிக்கொண்டால், நீங்கள் சிந்திக்கவேண்டிய வித்தில் சிந்தித்து ஆனந்தமாக வாழ உதவியாயிருக்கும். ஏனென்றால்

எல்லாவற்றையும் தேவன் நன்மைக்கு ஏதுவாக செய்கிறார் என்பதை அறிந்திருக்கிறீர்கள், ஒரு நாளில் எல்லாம் சீராக இருக்கும் ஒரு உலகத்தில் நீங்கள் இருப்பீர்கள்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆல்ரைட், இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம். நான் திரும்ப வந்ததும் ரேன்டியுடன் தொடாந்து நாம், அவர் புதிய வானம் மற்றும் பூமிக்கு செல்லும் போது அங்கு என்னவெல்லாம் இருக்கும் என்ற எதிர்ப்பார்ப்போடு இருக்கிறார் என்று கேட்கப்போகிறோம். இணைந்திருங்கள்: மீண்டும் சந்திப்போம்.

-----------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆல்ரைட், இப்போதும் நாம், டாக்டர். ரேன்டி அல்கார்னுடன் பேசிக்கொண்டிருக்கிறோம். பரலோகம் என்ற அருமையான தலைப்பை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். நாம் என்ன எதிர்பார்க்கவேண்டும்? பரலோகத்தில் எதிர்காலத்தில் நமக்கு என்ன செய்வதாக தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்? நமக்கு அவர் என்ன கொடுத்திடுவார்? உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா இயேசு சிலுவையில் இருந்தபோது இயேசு விசுவாசித்த கள்ளர்களில் ஒருவனைப் பார்த்து அவர் சொன்னார், "இன்றைக்கு நீ என்னுடனேகூட இருப்பாய், எங்கே? "பரதீசியில்". அதை ஒரு தோட்டத்திற்கு ஒப்பிடுகிறார். பரதீசி என்றால் என்ன? அது ஏதேன் தோட்டம். மற்ற இடங்களிலும், எபிரேயர் புஸ்தகத்திலும் நாம் இதை பார்க்க முடியும்: "அதிலும் மேன்மையான பரதேசத்தையே விரும்பி, காத்துக்கொண்டிருந்தார்கள்."
இங்கு தேவன் ஒரு தேசத்தைப் பற்றி கூறுகிறார். "ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனெனப்பட வெட்கப்படுகிறதில்லை அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினார் "அவர்களுக்கு ஒரு நகரம்." எனவே நமக்கு ஒரு தோட்டம், ஒரு பரதீசி, ஒரு தேசம் நகரம் இருக்கிறது. தேவன் பரலோகத்தை இந்த வார்த்தைகளால் வர்ணிக்கிறார். ரேன்டி, இதை விளக்குங்கள்.

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: வெல், இந்த பகுதி புதிய பூமியின் தன்மைகளைப் பற்றி பல கோணங்களில் சொல்கிறதென நினைக்கிறேன், அங்குதான் நாம் நித்தியமாக நம் தேவனோடும் ஆவிக்குரிய குடும்பத்தினரோடும் வாழப்போகிறோம். வெளிப்படுத்தல் 22ல் ஒரு ஊற்று இருக்கிறது, நதி இருக்கிறது, அது தேவனுடைய சிங்காசனத்திலிருந்து புறப்படும். அந்த நதியின் இரு கரைகளிலும் ஜீவ விருட்சம் இருக்கிறது, ஜீவவிருட்சக் காடுகள் போன்றிருக்கும். அது ஆதியாகமம் 1-2க்கு இணையானது, அதைப் போலவே விரிவித்து சொல்லப்படல. மேலும் இதில் வேளான்மை முன்னேற்ற பயன்பாடுகளும் அடங்கியுள்ளது, இங்கு கட்டிட வேலைகளும் இருக்கிறது. இந்த பெரிய உயர்ந்த மதில்கள் இருக்கிறது. இங்க அதிக மதிப்புள்ள ஆபரணங்கள் அழகான சித்திரவேலைகளும் இருக்கிறது. மேலும் பாய்ந்துசெல்லும் நதியின் தன்மையால் உண்டாகும் விளைச்சலும் அற்புதங்களும் இருக்கிறது. மேலும் ஜீவ விருட்சம் அதின் கனிகளைக் கொடுக்கிறது.

அது ஒரு நகரம், புதிய எருசலேம். அது ஒரு தேசம். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் பொக்கிஷத்தையும் புதிய எருசலேமிற்குள்ளாக டிகாண்டு வருவார்கள் என்று சொல்லப்படுகிறது, அவைகளை அவர் பாதத்தில் வைத்து கனப்படுத்திடுவார்கள், என்று சொல்லலாம், அவர்கள் நேசிக்கும் அவர்களின் ஆண்டவர் அவருடைய மகிமைக்காக அவர்கள் பிரயாசப்பட்டிருக்கிறார்கள். பரலோகத்தில் காரியங்கள் இதுதான். அது பரதீசி, அது நகரம், அது ஒரு தேசம். ஆந்த உலகின் பிரஜைகளாக நாம் இருந்திடுவோம், மேலும் நாம், தேவனுடைய குமாரர் குமாரத்திகளாக, ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் மீட்கப்பட்ட நாம், இந்த பூமியை ஆண்டுகொள்வோம். அவர் ராஜாதி ராஜா, எல்லாவற்றிற்கும் மேலானவர். அவர் ராஜாதி ராஜாவாயிருக்கிறார் -- முதன்மையானவர் "ராஜா", சிறிய நிலையிலான ராஜா அல்ல – அவருடைய புத்திரர்கள் அவருக்கு கீழாக தேவனுடைய மகிமைக்கென்று இந்த உலகை ஆளுகைசெய்திடுவர் அதினால் ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட நோக்கம் நித்திய நித்தியமாக நிறைவேறிடும். எவ்வளவு சுவாரஸ்யமாக காரியமாக இருக்கும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆமா. நான் ஒரு இரவு என்னுடைய தியான வேளையில் இயேசு பிலாத்துவிற்கு முன்பாக நிற்பதை வாசித்துக்கொண்டிருந்தேன், பிலாத்து கேட்கிறான், "நீர் ராஜாவா?" அவர் பிரதியுத்தரமாக, "ஆமா, நான் ராஜாதான் என்றர்." அது எனக்கு, அதிர்ச்சியாயிருந்தது, இயேசுவே சொல்கிறார், " நான் ராஜா." அதன் பிறகு அவர் சொல்கிறார், "என்னுடைய இராஜ்யம் இந்த பூமிக்குரியது அல்ல," ஓகே. ஆனா இப்ப அவர்தான் ஆளுகைசெய்கிறார். வானமும் பூமியும் இணைக்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்னன்னா பூமி இப்போது பாவத்தால் நிறைந்திருக்கிறது. ஆல்ரைட். உண்மை இதுதான், ஒருநாள் தேவன் அந்த பரலோக நகரத்தை இறக்கிவரச் செய்து பூமியோடு இணைத்திடுவார். அவர் அப்படி செய்வதற்கு முன்னதாக, இந்த பூமியில் பாவம் நிறைந்த அனைத்தையும் அவர் நிச்சயம் அழித்திடுவார். அதன் பிறகு நாம் அறிந்த இந்த பூமியும் அவர் புதுமையாக சிருஷ்டித்திடுவார், அவர் இதை இன்னும் அழகும் வியப்பும் நிறைந்ததாக

உருவாக்கிடுவார். அதன் பிறகு பரலோகத்தை கீழே கொண்டு வருவார். இப்போது பரலோக நகரமாகிய புதிய எருசலேமின் அளவு என்ன?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: வெல், அது 1200 நிலகையாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது, அதாவது அது சுமார் 1400 மைகளுக்கு இணையதக இருக்கும், 1400 மைல் கன அளவு.எனவே, எவ்வளவு உயரமோ அவ்வளவு அகலமா இருக்கும். அதாவது தோராயமான கணக்குப்படி அதனுடைய அளவு சுமார் கேனடாவிலிருந்து மெக்சிகோ வரைக்கும் அப்பறம் மேற்கு கடற்கரையிலிருந்து அப்லேசியன் மலைகள் வரைக்கு இருக்கும். நாம் முற்றிலும் வர்ணிக்க முடியாத பெரிய கட்டிடத்தை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனா அது புதிய எருசலேமின் அளவு மட்டும்தான். மேலும் வாசல்களுக்க வெளியே வந்தால் அங்கு பூமியின் ஜாதிகள் அங்கு இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது, பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள். நமக்காக தேவ்ன ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிற ஆச்சரியமான மகாபெரிய இடத்தை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆமா, 1400 மைல் உயரமாகவும் இருக்கும், ஓகே. அதாவது, அந்த எந்த அளவு உயரம் என்று எதையும் ஒப்பிட்டுச் சொல்லும்படியாக எதுவுமே இல்லை, அந்த அளவிற்கு உயரமாயிருக்கும். ஒரு வானவெளிகள் போன்றது, ஓகே. சரி, அது புதிய எருசலேமாக மட்டும் இருந்தால், ஓகே, தீர்க்கதரிச நிபுனர் ஒருவர் சொன்னதுபோல, அதாவது, எருசலேம் மட்டும் இந்த அளவுக்கு இருந்தா தேவ்ன நிச்சயம் பூமியின் அளவக் கொஞ்சம் பெரிதாக்கிட வேண்டும், வெளியில் இருக்கும் தேசங்கள் எப்படியிருக்கும் என்பதற்கான சாயல் இங்கிருக்கிறது. ஆனா உண்மை இதுதான், அவர் அப்படிதான் நினைத்திருப்பார் என்று நான் நினைக்கிறேன். நீங்க இப்ப சொல்லுங்க, கொஞ்ச துரிதமா அதைப் பார்த்திடலாம், ஜனங்களுடைய கருத்து, ‘‘சரி, ஒரு நிமிஷம் இருங்க. இதற்கெல்லாம் என்ன அர்த்தம் இப்போதிருக்கும் பரலோகம் மாற்றமடைந்து, இன்னும் சிறப்பாக உருவமைக்கப்படுமா? இப்போதைய பரலோகம் எப்படியிருக்கும்?நான் இப்ப மரித்தால், அல்லது நீங்க மரித்தால், நிச்சயமா, நாம உடனே தேவனோடு இருப்போம் நாம பரலோகத்தில தான் இருப்போம், ஓகே. இப்ப அங்க எப்படி இருக்குன்னு சொல்லுங்க. தற்போதைய பரலோகம் எப்படிபட்டது?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: இதைக் குறித்த விளக்கங்களை நாம பல பகுதிகளில் பார்க்க முடியும். அவற்றில் ஒன்று வெளிப்படுத்தல் 6, அதாவது இரத்தசாட்சியாக மரித்தவர்களை பற்றி இருக்கிறது. அவர்கள் தேவனோடு இருக்கிறார்கள், அவங்க ஒரு விஷயத்தை பற்றி பேசீட்டிருக்காங்க. ஒன்றாக சேர்ந்து சத்தமிட்டு கூப்பிடுகிறார்கள். அவர்கள், ‘‘எதுவரைக்கும், தேவனே, பூமியில் இருப்பவர்கள்மேல் எங்கள் இரத்தத்தை குறித்து பழிவாங்காமல் இருப்பீர்?’’ என்றனர், தற்போதிருக்கும் பரலோகத்தில் ஜீவன் இருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஒன்று, உண்மையில், ஜனங்கள் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கிறார்கள். அது, பவுல் சொல்வதுபோல், இதிலும் மேன்மையானது. அவர்கள் பாவமில்லாதிருக்கிறார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் தொடர்புகொள்கிறார்கள், எனவே அங்கும் அந்தந்த ஜாதியார் இருக்கிறார்கள். அவர்கள் சுயநினைவோடு இருக்கிறார்கள். ஒருவரோடொருவர் பேசி உறவாடிக்கொள்கிறார்கள். அவர்களுக்கு பூமியில் வாழ்ந்த காலத்தின் நினைவு இருக்கிறது. பலருடைய கருத்து என்னவென்றால், ‘‘நமக்கு, ஏதோ ஒரு சில நிகழ்வுகள் ஞாபகத்தில் இருக்கும், ஆனா நமக்கு நடந்த எந்த தீமையான விஷயமும் ஞாபகமிருக்காது என்றிடுவர்.’’ சரி, இவர்கள் கொலை செய்யப்பட்டதை நினைவில் வைத்திருக்கிறார்கள். இதற்கு மேல ஏதாவது கெடுதல் நடந்திருக்க முடியாது.

ஒரு விஷயம் இருக்கிறது, இந்த பூமியில் உங்களுக்கு நடந்த கொடுமையை உங்களால் தாங்க முடியாமல் போனதால் நீங்க பழைய விஷயங்களை மறந்திருக்கலாம் ஆனா அது பரலோகம் செல்ல வாய்ப்பாகாது. மாறாக, தேவன் கொடுக்கும் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும், அவருடைய சித்தத்தை நீங்கள் பார்ப்பீர்கள். அவர்கள் தாங்கள் கொல்லப்பட்டதை நினைவில் வைத்திருக்கிறார்கள், அதனால் தேவனை நோக்கி ஜெபிக்கிறார்கள். எனவே பரலோகத்திலுள்ள மக்களும் தேவனோடு பேசுகிறார்கள். அவரிடத்தில் வேண்டிக்கொள்கின்றனர். அவர்கள் கேட்கிறார்கள், ‘‘எதுவரைக்கும், தேவனே, இதை நீர் செய்யாமல் இருப்பீர்?’’ இது இன்னொரு விஷயத்தை தெளிவுபடுத்துகிறது, தற்போதைய பரலோகத்தில் நேரம் கையாளப்படுகிறது. நமக்கு எப்படி தெரியுன்னு சொன்னா, ‘‘எதுவரைக்கும், தேவனே, என்றதற்கு தேவன் அளிக்கும் பதில், ‘‘இன்னும் கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும்.’’ பரலோகத்தில் நேரம் கையாளப்படுவது தெரிகிறது. வெளிப்படுத்தல் 8:1 கூறுகிறது அரைமணிநேரம் பரலோகத்தில் அமைதல் உண்டாயிற்று. எனவே பரலோகத்தில் காலங்களையும் நேரங்களையும் அனுபவிக்கும் ஜனங்களாக இருப்போம் என்பது தெளிவாகிறது.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆல்ரைட், அவர்களும் தேவனுடைய வருகைக்காக காத்திருக்கிறார்களே. எதற்காக?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: ஏனென்றால் கிறிஸ்து திரும்ப வரும் போது அவர்களும் அவருடன் வந்து இந்த பூமியில் ஆயிற வருட அரசாட்சியை ஏற்படுத்திடுவார்கள், அப்படி நடக்கும் சமயத்தில் தான், புதிய வானங்களும் புதிய பூமியும், இறுதிய நியாயத்தீர்ப்பிற்கு பிறது, தோன்றும் அவர்கள் தேவனை கேட்டுக்கொண்ட நியாயத்தீர்ப்பை அப்போது அவர் வழங்கிடுவார்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: அதோடுகூட அவர், அந்த சமயத்தில், பூமியை அழித்திடுவார், பூமியின் பாவங்களை அழித்து, புதிபடைப்பாக்கிடுவார். நாம் ஆனந்தமாக இருக்கப்போகிற அந்த புதிய பூமியை உங்களுடைய கண்ணோட்டத்தில் எப்படி பார்க்கிறீர்கள் என்று சொல்லுங்க, ஏன்னா தேவன் நமக்கென்று ஆயத்தம் செய்கிறார். நமக்கு என்ன பிடிக்குமென்று அவருக்கு தெரியும் நம்மை அவ்விதமாக படைத்திருக்கிறார், இந்த கேள்விக்கு நீங்கள் சொல்லும் பதில் இதோ கேள்வியோடிருக்கும் அநேகருக்கு பதில் பெற உதவியாயிருக்கும். புதிய பூமியானது எப்படிபட்டதாக இருக்கும்?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: உயிர்த்தெழுதல்னா என்ன என்பதை புரிந்துகொள்வதுதான் எல்லாவற்றிற்கான திறவுகோல் என நினைக்கிறேன். அதுதான் வசனத்தின் வாக்குறுதியாயிருக்கிறது. 1 கொரிந்தியர் 15 சொல்லப்படுகிறது, "உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் நாம் எல்லாரிலும் பரிதபிக்கப்பட்டவர்களாக இருப்போம்." உயிர்த்தெழுதல் தான் அடிப்படையானது. அதாவது ஆவியானது சரீரத்திலிருந்து விடுவிக்கப்படவேண்டும் -- அது கட்டுகளிலிருக்கிறது, சரீரத்தால் கட்டப்பட்டிருக்கிறது, இதுதான் பிலேட்டோவின் போதனை – அது அந்நிய வார்த்தைகள். வேதம் சொல்கிறது தேவன் நம்மை மாம்ச சரீரமுள்ள ஆவிக்குரிய ஜீவன்களாக உருவாக்கியிருக்கிறார். உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தம் இதுதான், நாம் மீட்கப்பட்ட நிலையில் நித்தியமாக வாழ்ந்திடுவோம், ஆனா நமக்கு நமது சரீரம் இருக்கும் --- பூரணமாக்கப்பட்ட நம்முடைய சொந்த சரீரம் --- நிஜமான பூமியில் வாழ்ந்திடுவோம் --- பூரணமாக்கப்பட்ட இந்த பூமியில், புதுப்பிக்கப்பட்ட, அழிவிலிருந்து மீட்டிடடுக்கப்பட்ட, நித்தியத்திற்காக உயிர்ப்பிக்கப்பட்டதாயிருக்கும். அதன்பின்பு வாக்குத்தத்தங்கள் நிறைவேறும், வாழ்வில் சந்தோஷமிருக்கும், உறவுகள் மேம்படும், தொடர்புகள் ஏற்படும், உலகில் அதிசயங்கள் தோன்றும். ரோமர் 8ல் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறது என்கிறது, விடுவிக்கப்படும்படியாக அவை கதறிக்கொண்டிருக்கிறது. மேலும் அவை தேவனுடைய புத்திரர் வெளிப்படும்போது விடுவிக்கப்படும் என்று கூறுகிறது. எனவே நம்முடைய உயிர்த்தெழுதலில் மனுக்குலம் மீட்கப்படும்போது, விழுந்துபோன இந்த சிருஷ்டியானது நம்மோடு கூட உயிர்ப்பிக்கப்படும். அது மிகவும் சுவாரஸ்யமானது.

என்னுடைய நண்பர் டேவிட் ஓ பைரனை நினைக்கிறேன், அவருக்கு மூளை வாதம், அவருக்கு 65 வயதாகிறது. இவ்வளவு காலங்களாக டேவிட் என்ன அனுபவித்திருக்கிறார், சீர்குழைந்த ஆரொக்கியம் தான், நல்ல ஆரோக்கியத்தோடு இருந்ததேயில்லை, ஒரு நாள் விடுதலை பெற்றார். இந்த பூமியில் இருந்து, புல் வெளிகளில் ஓடி, நீச்சலடித்து, தனக்கு முன்பாக இருந்ததை அனுபவித்தவர் புதிய சரீரத்தோடு தேவனுக்கு முன்பாக நிற்கிறார். தேவனோடு அவர் இருக்கிறார், இப்போது, தேவனே நன்மையானவற்றிற்கு காரணராக இருக்கிறார். மீட்கப்பட்ட தேவனுடைய ஜனங்களுக்கு இதுதான் நித்தியமாக இருந்திடும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: இன்னும் அதிக பயங்கறமாக இருக்கப்போகிறது. இப்போது தான் நாம் ஆரம்பித்திருக்கிறோம், நேயர்களே. அடுத்த வாரம் நாம் பேச இருப்பது, பரலோகம் எப்படி இருக்கும்? பரலோகத்திற்கு செல்லும்போது உங்களுக்கு என்ன வயதாக இருக்கும்? 95 வயதாக இருப்பவர்கள் சொல்லலாம், "நான் பரலோகத்துக்கு போனா என்னோட வயசு என்னவாயிருக்கும் என்று தெரியலயே," ஒருவேளை 4 அல்லது 5 வயதாக இருப்பவர்கள் சொல்லலாம், " நா பரலோகத்துக்கு போகும்போது எனக்கு 4 இல்ல 5 வயசாதா இருக்குமோ?" அந்த கேள்விய நாம ரேன்டியிடம் கேட்கப்போகிறோம். நமக்கு அங்கே ஒரு வீடு இருக்குமா? நாம் வாழப்போகும் இடம் எப்படிபட்டதாக இருக்கும்? எல்லாரும் அறிந்துகொள்ள விரும்பும் பொதுவான கேள்விகளில் இதுவும் ஒன்று. அடுத்த வாரம் இதைப் பற்றி பேசிடலாம். நீங்கள் தவறவிடவேண்டாம்.

எங்களுடைய மற்ற டிவி நிகழ்சிகளை பார்க்க எங்களுடைய ஜான் அன்கேர்பெர்க் ஷோ ஆப்பை இலவசமாக பதிவிறக்கம் செய்திடுங்கள்.

"இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கான ஜெபம்" JA show.org